Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X


# Women's Lives in Sangam Literature

**V. Dhanalakshmi**, Reg. No.231906007, Tamil Research Scholar, Faculty of Humanities and Science, Meenakshi Academy of Higher Education and Research, Deemed to be University, Chennai, Tamil Nadu, India.
**Dr**. **G**. **Krishnan**, Professor of Tamil, Humanities and Science, Meenakshi Academy of Higher Education and Research, Deemed to be University, Chennai, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0006-7095-483X
**DOI: 10.5281/zenodo.14744780**

## Abstract

*The women of the Sangam Age excelled in love and bravery. Sangam Poems depicts the culture and civilization of the Tamils. The longing of the leader for the beloved in the Akathinai and the words of the leader to the heart of the beloved are the expression of the relationship of husband and wife towards the family. If every human being lives with great love in his heart, this world will be blessed. But many people live with anger, saying lies, jealousy and deceit. The woman is the victim of every change in the society. Women have to carry the burden of the family and avoid the luxuries of society.* In Sangam times , *Chaste women are from a virtuous family, hospitable, educated and prosperous. Women who are born in the family of prostitutes like Kanikaiyars and Kamakathiyars want to see a change in their lives. Sangam life portrays it. The Sangam literature is said to be a mirror of time depicting the life ethics of the ancient Tamil people. That is why Sangam literature is considered as the two eyes of the Tamils. In the Sangam age, women were intelligent advised the kings and possessed the chief virtue of hospitality. They have dedicated themselves to this world in various stages such as nurse, daughter, wife and friend. A woman is judged in society by the place or environment in which she lives. Hence, this paper explains the life of women in Sangam literature.*

**Keywords:** Women, Sangam Life, Chaste Women, Hospitality, Prostitutes.

## References

[1] Iraiyarasan, P. Tamizhar Nakarika Varalaru. Poompukar Pathippgam, Chennai, 1993.
[2] Sanmukampillai, M. Tholkappiyam Porulathikaram. Mullai Nilaiyam, 2004.
[3] Sorna Seya, P. "Sanka Ilakkiyankalil Penkalin Vazhviyal Nerikal." Thokuthi 2, Sirappithalzh 3, Thokuthi 1, February 2020.
[4] Dhasanamoorthi, A. (U.A), *Ainkurunooru* (Moolamum Uraiyum). New Century Book House, Chennai-600 098.
[5] Duraisamippillai, Auvai. *Purananooru.* Saivasitthantha Noorpathippuk Kazhakam, Chennai-108.
[6] Nacchinarkkiniyar, Urai. *Tholkappiyam Porulathikaram*. Annamalai Palkalaik Kazhakam-1986.
[7] Nacchinarkkiniyar. *Kalitthokai.* Saivasitthantha Noorpathippuk Kazhakam, Chennai.
[8] Nakarason, V. (U.A). *Kurunthokai* (Moolamum Uraiyum). New Century Book House, Chennai-600 098.
[9] Parimelazhakar, Urai. *Thirukkural*. Poompukar Pathippagam.
[10] Pillai, K. *Tamizhaka Varalaru Makkalum Panpadum*. Ulaka Thamizharaychi Niruvanam, Chennai, 2000.

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

[11] Porselvi, Po. "Sanka Ilakkiyankalil Vazhviyal Nerikal." *Tamilmozhi Mattum Ilakkiya Pannattu Aayvithazh*, Thokuthi 2, Sirappithazh 3, February 2020.
[12] Ponnusami, M. "Sanka Ilakkiyatthil Kathal Meyppadukal." Indhu Pathippagam, 1990.
[13] *Sankappura Ilakkiyankalil Samayam, Sadanku, Kalaikal*. Website.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

# சங்ககாலப் பெண்களின் வாழ்வியல் நெறிகள்

**வெ. தனலட்சுமி,** பதிவு எண் 231906007, தமிழ் முனைவர் பட்ட ஆய்வாளர், கலை மற்றும் மானுட அறிவியல், மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், நிகர்நிலைப் பல்கலைக்கழகம், சென்னை, தமிழ்நாடு, இந்தியா.
**முனைவர் கோ. கிருஷ்ணன்**, பேராசிரியர், தமிழ்த்துறை, கலை மற்றும் மானுட அறிவியல், மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், நிகர்நிலைப் பல்கலைக்கழகம், சென்னை, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0006-7095-483X
DOI: 10.5281/zenodo.14744780

**ஆய்வுச்சுருக்கம்**

*சங்ககால மகளிர் காதலிலும், வீரத்திலும் சிறந்து விளங்கினார்கள். சங்கப்பாக்கள் ஒவ்வொன்றும் தமிழரின் பண்பாட்டையும், நாகரிகத்தையும் விளக்குவன. அகத்திணையில் தலைவனுக்காகத் தலைவி ஏங்குவதும், தலைவிக்காகத் தலைவன் நெஞ்சிற்குச் சொல்லியதும், குடும்பத்தின் பால் கணவன் மனைவியின் உறவை வெளிக்காட்டி நிற்பதாகும். ஒவ்வொரு மனிதனும் உள்ளத்தில் பேரன்போடு வாழ்வானாயின் இவ்வுலகம் பேறு பெற்றதாய் விளங்கும். ஆனால் கோபம், பொய், பொறாமை, வஞ்சகக் குணத்தோடு தான் நிறைய மனிதர்கள் உறவாடிக் கொண்டிருக்கிறார்கள். சங்க காலத்தில் மனிதர்களின் கோபம் எங்கே வெளிப்படுகிறது? புறத்திணையில் போர்க்களங்களில் அடி மனதில் தோன்றும் கோபத்தின் எல்லையே ஒருவரை ஒருவர் வீழ்த்துகின்றனர். போரின் காரணமாக இறந்து போன மனிதப் பிணங்கள் குவிக்கப்படுகின்றன. போரின் காரணமாக அவர்களின் தாய், தாரம், மகள் எங்கே? அவர்கள் இவ்வுலகத்தில் எத்தனை துன்பங்களை அனுபவித்தாக வேண்டும். சமுதாயத்தில் நடக்கும் ஒவ்வொரு சூழ்நிலை மாற்றத்திற்கும் பெண்ணே பாதிக்கப்படுகிறாள். குடும்பத்தின் சுமையையும் சுமக்கவேண்டும், சமுதாயத்தின் பார்வையையும் தவிர்க்க வேண்டும். கற்பு நெறியில் வாழும் பெண்கள் நல்லறத்துடன் குடும்பம் நடத்தி விருந்தோம்பல், கல்வி பயின்றுகுழந்தைச் செல்வம் பெற்ற பெண்ணினம். பரத்தையர், கணிகையர், காமக் களத்தியர் என்ற குலத்திலே பிறந்து தங்களின் வாழ்க்கையில் திருப்பம் காணத் துடிக்கும் பெண்ணினம். சங்ககாலப் பெண்களின் உயர்வு, தாழ்வை வெளிப்படுத்த முற்படுகிறது. சங்க இலக்கியங்கள் பண்டைய தமிழ் மக்களின் வாழ்க்கை நெறி முறைகளைப் படம் பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடி என்பர். அதனால் தான் சங்க இலக்கியங்கள் தமிழர்களின் இரு கண்களாகத் திகழ்கின்றன. சங்க காலத்திலே பெண்கள் வீரமிக்கவர்களாகவும், புலமைபெற்றும் அரசர்களுக்குக் கூட அறிவுரை வழங்கியும், விருந்தோம்பல் என்ற தலையாயப் பண்பைப் பெற்றவர்களாகவும் இருந்தனர். நற்றாய், செவிலித்தாய், மகள், மனைவி, தோழி என பல்வேறு படிமைநிலைகளில் தன்னை இவ்வுலகிற்கு அர்ப்பணித்துக் கொண்டவர்கள். இது ஒருபுறம் இருக்க, சங்ககாலத்தில் காமக்கிளத்தி, பரத்தை என்ற பிரிவினரும் வாழ்ந்து வந்துள்ளனர்.*

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

*பெண்கள் வாழுகின்ற இடம் அல்லது சூழ்நிலை கொண்டே அவள் இச்சமூகத்தில் மதிப்பிடப்படுகிறாள். ஒவ்வொரு பெண்ணும் தனக்குண்டான சூழலைத் தேர்ந்தெடுப்பதில்லை. வாழும் சமூகத்திடமிருந்து திணிக்கப்பட்டதைத் திறம்பட செயல்படுத்தவே முயல்கின்றாள். சங்ககாலச் சமுதாயத்தில் பெண்ணினம் வாழக்கற்றுக் கொண்டதா? என்பதையும் சங்ககால இலக்கிய பெண்களின் வாழ்வியலையும் இவ்வாய்வுக் கட்டுரையானது விளக்குகின்றது.*

**குறிப்புச்சொற்கள்:** பெண்கள், சங்க வாழ்க்கை, கற்பு மிக்க பெண்கள், விருந்தோம்பல், பரத்தையர்.

**முன்னுரை**

பெண்ணினம் பண்பாலும் நெறியாலும் சிறந்தவர்கள். அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல் நிச்சமும் பெண்பாற்கு உரியஎன்ப (தொல்.பொருள்.களவு., நூ. 8) பெண்களுக்கு அச்சம், மடம், நாணம் என்ற மூவகைப் பண்புகள் இருக்கவேண்டும் என்கிறார் தொல்காப்பியர்.

**அச்சம் – பெண்களின் மனதில் குறிப்பின்றித் தோன்றும் நடுக்கம்.**

**நாணம் – பெண் தன்மைக்குப் பொருந்தாத செயல்களில் ஒதுங்கி இருப்பது.**

**மடம் – மனதால் புரிந்தும் புரியாமல் இருத்தல்.**

இவ்வுலகம் தழைக்கமக்களைப் பெற்றுக் கொடுத்தவர்கள். பெண்ணினம் இல்லையாயின் மனித இனமே இல்லாத ஒன்றாகியிருக்கும்.

**கல்விநெறியில் பெண்கள்**

பெண்கள் இல்லாத சமூகம் வெறுமையுற்றது. இவ்வுலகில் பெண்மையைப் போற்ற வேண்டும். "சங்ககாலப் பெண்கள் ஆண்கள் அளவிற்குச் சமவுரிமை பெறவில்லை என்றாலும் அடிமைகளாய், வாழ முடியாதவர்களாய் இல்லை. சமயம், கல்வி, காதல் ஆகியவற்றில் உரிமை மகளிராய்த் திகழ்ந்தனர்" என இறையரசன் கூறுவது உண்மையானது. சங்ககாலத்தில் நச்செள்ளையார், நன்முல்லையார், ஆதி மந்தியார், நப்பசலையார், ஒக்கூர் மாசாத்தியார், காவற் பெண்டு, நக்கண்ணையார், நெட்டிமையார், நெடும்பல்லியத்தை, பொத்தியார், பேய்மகள், இளவெயினி, வருமுலையாரித்தி, வெண்ணிக்குயத்தியார், வெள்ளிவீதியார், பாரிமகளிர்கள், காமக்கண்ணியார், முடத்தாமக்கண்ணியார், பொன்முடியார், காக்கைப்பாடினியார், ஔவையார் போன்ற பெண்பால் புலவர்கள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியுள்ளனர். அவர்களின் செருக்கு பற்றிக் கூறும்போது,

**வரிசைக்குவருந்தும் இப்பரிசில்வாழ்க்கைப்**
**பரிசிலர்க்கு அடையாவாயிலோயே!**
**கடுமான்தோன்றல் நெடுமான்அஞ்சி**
**தன்அறியலன்கொல்? என்அறியலன்கொல்?**
**அறிவும்புகழும் உடையோர்மாய்ந்தென,**

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

**எத்திசைச்செல்லினும் அத்திசைச்சோறே (புறம்., 206: 4-13)**

எனக் குறிப்பிட்டுள்ளனர். என்னிடம் புலமை இருக்கிறது. நான் எந்த ஒரு மன்னனை ஆவது புகழ்ந்து பாடிப் பரிசிலைப் பெற்று விடுவேன். நெடுமான் அஞ்சியைப் பற்றி எனக்குத் தெரியாதா? என்னைப் பற்றி நெடுமான் அஞ்சிக்குத் தெரியாதா? நீ இல்லையென்றால் என்ன? எனக்கு எந்த திசைச் சென்றாலும் சோறு கிடைக்கும் என ஔவையார், அதியமானிடம் கேட்பதிலிருந்து பெண்களுடைய உயர்வை சங்ககாலத்தில் நலமாக உள்ளது என அறியலாம். "மகளிர் தம் குடும்பப் பாங்கிற்குத் துணை செய்யும் கல்வியினைப் பயின்றனர். மகளிர் கற்ற கல்வி அவர் தம் உடலுறுப்புக்களுக்குப் பயிற்சி தருவதாகவும் திருமணத்திற்குப் பிறகு இல்லறவாழ்வில் ஈடுபடுவதற்குத் துணைசெய்யும் கருவியாகவும் அமைந்தது. குடும்பக் கல்வியினைத் தாயிடமும், செவிலித்தாயிடமும், தோழியிடமும் கற்றாள்" என்று பெண்களின் கல்வி நிலை பற்றி ச. பாலசுப்பிரமணியன் கூறுகின்றார்.

**காதல் மகளிர்**

சங்க இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள பெண்கள் சுதந்திரமாகவும், அதே நேரத்தில் தன்னுடைய தலைவனைத் தானே தெரிவு செய்யும் மனப்பான்மையையும் பெற்றிருந்தனர். தங்கள் தலைவர்களோடு தினைப்புனம், காடு, வயல், கடற்கரை மணல், சுனை போன்ற இடங்களில் காதலை வளர்த்துக் கொண்டார்கள்.

**நிலத்தினும் பெரியதே, வானினும் உயர்ந்தன்று**
**நீரினும்ஆர்அளவின்றே**
**கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு**
**பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே (குறும்., 3: 1-4)**

இங்கு தலைவனோடு தலைவி கொண்ட காதலானது நட்பு, மொழி, மனம், மெய், என்பதைக் கடந்து நிற்பது ஆகும். நிலம், வான், நீர் என மூன்றினையும் விட உயர்ந்தது என்கிறார் ஆசிரியர். ஊரில் ஏற்பட்ட அலரால் தலைவியுடைய காதல் பெற்றோர்க்கு தெரியவருகிறது. பெற்றோரும் எதிர்ப்பு தெரிவிக்கும் நேரத்தில், தலைவி தன் தலைவனோடு உடன்போக்கு செல்வதற்கும் தயங்கமாட்டாள் என்கிறது சங்க இலக்கிய பாடல்கள்.

**துள்ளித்திரிந்த மகளிர்கள்**

எப்போதும் மகிழ்ச்சியும் மனநிறைவுமாகவே வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இல்லையென்றால் குறிஞ்சிப்பாட்டிலே தலைவி ஒருத்திதன் தோழிகளுடன் சுனை நீராடுகையில் அங்கே இருக்கும் கற்பாறையில் தொண்ணூற்று ஒன்பது வகையான மலர்களைப் பறித்து வைத்து அழகு பார்த்திருக்கமாட்டாள்.

**செறிஅரிச்சிலம்பின், குறுந்தொடிமகளிர்**
**பொலம்செய்கழங்கின்தெற்றிஆடும்**
**தண்பொருநைவெண்மணல்சிதைய,**

**கருங்கைக்கொல்லன்அரம்செய்அவ்வாய்**

**நெடுங்கைநவியம்பாய்தலின், நிலைஅழிந்து (புறம்., 36: 3-7)**

அழகிய வளையல்களை அணிந்த மகளிர்கள் வண்டல் மண்ணால் பாவை செய்வதும், மணல் மேட்டிலே கழற்சிக் காய்களை ஒருவருக்கொருவர் வீசி விளையாடுவதும், பொற்சிலம்பு ஒலிக்க மேல் நிலைமாடத்தில் பந்தாடுவதையும், சுனை நீராடல், சிற்றில் இழைத்தல், துணங்கையாடல், குரவை ஆடல் போன்ற விளையாட்டுக்களில் ஈடுபடுவதுமாக இருந்துள்ளனர்.

**நல்லறமேஇல்லறம்**

ஒவ்வொரு பெண்ணுக்கும் திருமணம் தவிர்க்க முடியாதது. தன்னைத் திருமணப்பந்தத்திலே ஈடுபடுத்தி வாழ்க்கையை முழுமை ஆக்குகின்றாள். ஒவ்வொரு பெண்ணும் தனக்கு எவ்வாறு கணவன் அமைய வேண்டும் என கனவு காண்பாள். அக்கால மகளிரும் தனக்கு எவ்வாறு கணவன் அமைய வேண்டும் என கனவு காண்பாள். அக்கால மகளிரும் தனக்கு வாய்க்கும் கணவன் வீரம் உடையவனாகவும், அஞ்சா நெஞ்சம் உடையவனாகவும் இருக்க வேண்டுமென விரும்பினர். காளையை அடக்கும் வீரர்கள், வட்டக்கல் தூக்கும் வீரர்களுக் கேதங்கள் மனதினைப் பறிக்கொடுத்தனர். வீரம் இல்லாத ஆண்களை வேண்டாம் என ஒதுக்கினர் என்பதை,

**கொல் ஏற்றுக்கோடு அஞ்சுவானை மறுமையும்**

**புல்லாளே, ஆயமகள்**

**அஞ்சார் கொலைஏறு கொள்பவர் அல்லதை,**

**நெஞ்சினர் தோய்தற்கு அரிய - உயிர்துறந்து**

**நைவாரா ஆயமகள் தேர்' (கலித்., 103: 63-67)**

*கலித்தொகை* தலைவி மறுபிறப்பும் கூட அந்த வீரமற்றவனைத் திருமணம் செய்யமாட்டேன் என்கிறாள். சங்க இலக்கியத்தில் ஒத்தவயதுடைய தலைவனும், தலைவியும் காதல் கொண்டு திருமணம் செய்யலாம் என்கிறது. தொல்காப்பியர் கூட,

**பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு**

**உருவு நிறுத்த காம வாயில்**

**நிறையே அருளே உணர்வோடு திருஎன**

**முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே (தொல்., பொருள். மெய். நூ. 25)**

எனபத்து வகையான ஒழுகலாறுகளைக் கூறிச்செல்கின்றார். தலைவியின் திருமணத்தின் போது, பந்தலிட்டு, புதுமணல் பரப்பி, மனை விளக்கு ஏற்றி மாலைகளைத் தொங்கவிட்டனர் என்றும், புதல்வனைப் பெற்றெடுத்த மகளிர்கள் நெல்லும் மலரும் கலந்ததை அம்மணமக்கள், மேல் தூவி வாழ்த்துவதாகக் கூறுகிறது,

**உழுந்து தலைப்பெய்த கொழுங்களி மிதவை**

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

**பெருஞ் சோற்று அமலைநிற்ப, நிரைகால்**
**தண்பெரும் பந்தர்த்த ருமணல் ஞெமிரி,**
**மனை விளக்குறுத்து, மாலை தொடரி,**
**கனைஇருள் அகன்றகவின் பெறுகாலை,**
**கோள்கால் நீங்கியகொடு வெண்திங்கள்**
**உச்சிக் குடத்தர், புத்தகல் மண்டையர்,**
**பொதுசெய்கம்பலைமுதுசெம்பெண்டிர்**
**முன்னவும் பின்னவும் முறைமுறைதரதர,**
**புதல்வற் பயந்ததி தலை அவ்வயிற்று**
**வால் இழைமகளிர் நால்வர் கூடி,**
**கற்பினில் வழாஅ, நற்பல உதவிப்,**
**பெற்றோற்பெட்கும்பிணையைஆக! என (அகம்., 86: 14)**

அகநானூற்றுப் பாடல் கூறுகிறது. நல்ல நேரம் பார்த்தல், சகுனம் பார்த்தல், திருமணத்தின் போது உணவு பரிமாறுதல், (அகம்., 136) முரசு கொட்டுதல் போன்ற நிகழ்வுகள் சங்ககாலத்தில் இருந்ததாக அறிகின்றோம். ஆனால் அக்காலத்தில் தாலி கட்டும் வழக்கம் இருந்ததாகத் தெரியவில்லை. மலைப்பக்கத்தில் வாழும் குறவர்கள் தம்மனைவிமார்கள் தவறாது தங்கள் கணவர்களைத் தினம் தினம் தொழுதெழுவதால் அக்குறவர்கள் தொடுக்கும் அம்புகள் குறி தவறிச் செல்லாதாம் என சங்கப் பாடல் கூறுகிறது. சங்க காலத்து மகளிர் தங்களுடைய கணவர்களையும் கண்ணுக்குக் கண்ணாக போற்றி வந்தனர். திருமணத்திற்கு முன் துள்ளித் திரிந்த மகளிர் திருமணம் ஆன பிறகு தன்கணவனே உயிர் என்று அன்பிற்கு ஏங்கும் பாவைகளாகவும் திகழ்கின்றனர்.

**இம்மை மாறிமறுமை ஆயீனும்,**
**நீஆகியர் எம் கணவனே**
**யான் ஆகியர் நின்நெஞ்சு நேர்பவளே' (குறும்., 49: 3-5)**

இந்தப் பிறப்பு மட்டுமின்றி இனி வருகின்ற ஏழேழு பிறப்புகளிலும் நீயே என் கணவனாக வர வேண்டும் எனச் சங்ககால மகளிர் ஆசைப்பட்டனர். மேலும் பொருள் தேடத் தன்தலைவன் பிரிந்து சென்றால் அவன் இல்லாத நாட்களை ஒவ்வொரு நாளும் யுகமாகக் கழித்தும், முள் படுக்கையில் இருப்பது போன்று எண்ணியும், பிரிந்து சென்ற தலைவனின் காட்டு வழிக் கொடுமையினை எண்ணி வருந்தியும்,கார் காலத்தை எதிர் நோக்கியும், சுவரிலே கோடிட்டு தலைவன் வரவை எதிர் நோக்கிக் காத்துக் கொண்டிருந்தனர் என நற்றிணைப் பாடல் (நற்., 324) மூலம் அறியலாம். அது போல் ஐங்குறுநூற்றில் ஒரு தலைவி திருமணமாகித் தலைவனுடன் தன் புகுந்த வீட்டிற்குச் சென்ற ஓரிரு மாதம் கழித்து முதன் முதலில் தன் பிறந்த வீட்டிற்கு வரும் தலைவியிடம் நலம் விசாரிக்கிறார்கள் உறவினர்கள் என்பதனை, "மான்

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

உண்டு எஞ்சிய கவிழிநீரே" (ஐங்., 203: 4) என்னும் பாடல் வரியில் குளத்திலே கலங்கிய தண்ணீரை வெப்பம் மிகுதியால் அந்த பக்கம் சென்ற மானானது உண்டது. அந்த எச்சில் தண்ணீர் கூட எனக்கு இனியதேனோடு கலந்த பசுவின் பாலை விட இனிமையானது என்கிறாள் தலைவி. தன் புகுந்த வீடும், நாடும் ஏழ்மை வறட்சி உடையது என்பதை அறிந்திருந்தும் உறவினர்களிடம் தன் கணவனின் நலன் கெடாதவாறு தலைவி கூறுகிறாள் இதைவிட ஒரு பெண் தன்னுடைய புகுந்த வீட்டிற்கு வேறென்ன பெருமை சேர்க்கமுடியும்.

**விருந்தோம்பல்**

நம் தமிழ் பண்பாட்டில் பகைவர்களாக இருந்தாலும் வீட்டிற்கு வந்தால் அவர்களை வா என்று அழைக்கும் வழக்கம் நம்மக்களிடையே உள்ளது. மகிழ்ச்சியிலும் பெரும் மகிழ்ச்சி மற்றவர்களுக்கு உணவு அளித்து ஆனந்தப்படுவதே ஆகும். அப்படிப்பட்ட உயர்வான பண்பினை எப்போதும் குறையாத அளவிற்கு பெற்றிருந்தனர் சங்ககாலப் பெண்கள். தொல்காப்பியர் கூட,

**விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்**
**பிறவும் அன்னகிழவோன் மாண்புகள் (தொல்., பொருள். கற்பு. 11)**

எனக் கூறுகிறார். ஒழுக்கமும், பொறுமை குணத்தையும், அடக்கம் உடைமையினையும் கொண்ட பெண்கள் விருந்தினரை நன்றாகக் கவனிப்பார்கள். விருந்தினரை வரவேற்று அவர்கள் விடைபெறும் போது அவர்கட்கு வெற்றிலைப்பாக்குக் கொடுக்கும் வழக்கம் உள்ளது. விருந்தினரை வழி அனுப்பும் போது ஏழடி உடன்பின் சென்று அனுப்புதல் வழக்கம் போன்றவை தமிழரின் பண்பாட்டைக் கூறுகிறது. **"செழுங்கோள் வாழை அகல் இலைப்பகுக்கும்" (புறம்.,168: 13)** பன்றி தோண்டிய வயலில் திணை விதைத்து அவற்றை அறுவடையும் செய்த உழவுப் பெண்கள் திணைச்சோற்றோடு பாலை உலை நீரோடு வார்த்த மானிறைச்சியைத் தன்னுடைய விருந்தினர்க்குப் படைத்தனர். மேலும், தங்கள் கணவன் இல்லாத நேரங்களில் விருந்தோம்பல் செய்வதில்லை என்றசெய்தி அவர்களின் கற்புத்திறத்தைக் காட்டுவதாக அமைகிறது.

**குழந்தைச்செல்வம்**

செல்வம் எவ்வளவு இருப்பினும் அது குழந்தைச் செல்வத்திற்கு ஈடாகாது. ஒரு பெண் பிறந்துவிட்டால் அவள் தாய்மையை எய்தாவிடில் அவளுடைய உடல் தீயிலே வேகாது.

**இட்டும், தொட்டும், கவ்வியும், துழந்தும்,**
**நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும் (புறம். 185: 4-5)**

குழந்தையானது குறு குறு நடைநடந்து, சிறுகை நீட்டி இட்டும், பிசைந்தும், வாயால் கவ்வியும், கையில் துழாவியும், சோற்றை தன் உடம்பிலே கொட்டியும் உண்ணுகின்ற அழகைப் பார்ப்பதற்கு அந்தத்தாய்க்கு ஆயிரம்கண்கள் வேண்டும். இப்படிப் பாசம்மிகுந்த தாயாக மட்டும் அல்லாமல் வீரம் மிகுந்ததாயாகவும் இருக்கின்றாள். புறநானூற்றிலே ஒரு தாய் முதல் நாள்

தந்தை, அடுத்த நாள் கணவன், அடுத்த நாள் தன்மார் மேலும் தோள் மேலும் போட்டு வளர்த்த பிள்ளையைப் போருக்கு அனுப்புகிறாள். அப்போரிலே தன் மகன் மார்பிலே புண்பட்டு வீரமரணம் அடைந்ததை எண்ணி மார்பிலே பால்சுரந்ததாம் அந்தத்தாய்க்கு என்கிறார் ஆசிரியர். சங்ககாலந்தொட்டு இன்று வரை பல்வேறு குணநலன்களைப் பெற்று பெண்கள் திகழ்ந்து வருகின்றனர். குறிப்பாக ஐவகை நிலங்களில் வாழ்ந்து வந்த பெண்கள் விருந்தோம்பலில் மட்டுமல்லாது பல்வேறு சிறப்புகளைப் பெற்றும் சிறந்து விளங்கி வாழ்ந்துவந்துள்ளனர்.

**உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்**
**செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்றெென (தொல். பொருள். களவு. 23)**

பெண்களுக்கு உயிரைவிட நாணமே சிறந்தது என்றும், அந்நாணத்தைவிட குற்றமில்லாத கற்புதான் சிறந்தது எனத் தொல்காப்பியரும் பெண்ணினுடைய கற்பின் சிறப்பைப் பற்றிக் கூறியுள்ளார். கற்பு என்பது தன் கணவனைத் தெய்வமென்று உணர்வதன் மேற்கோள் என்பர் நச்சினார்க்கினியர்.

**சங்கப்புற இலக்கியங்களில் மகளிர் சடங்குகளும், நம்பிக்கைகளும்**

மனித வாழ்க்கையின் அனைத்து நிலைகளிலும் சடங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு சமயத்திலும் நிகழும் சடங்குகளும் வழிபாட்டு மரபுகளும் அச்சமூகத்தை ஒன்றிணைக்கும் சக்தியாகச் செயல்படுகின்றன.

1. சடங்கு என்பது நிகழ்த்தப்படுவது. நம்பிக்கை என்பது முன்னோர்களால் வழி வழியாகப் பின்பற்றப்படுவது.
2. குழந்தை பிறந்தவுடன் பிறப்புச் சடங்காக நீராடி வழிபடும், சடங்கு பின்பற்றப் பட்டிருக்கிறது.
3. சங்ககால மகளிர் சிவன், திருமால், முருகன், கொற்றவை ஆகிய தெய்வங்களை வழிபட்டு இருக்கின்றனர்.
4. வழிபாட்டு இடங்களுக்குச் செல்லும் போது மகளிர் தங்களை அழகுபடுத்திக் கொண்டு, கணவன் மற்றும் பிள்ளைகளுடன் சென்றிருக்கின்றனர். பயணத்தின் போது அச்சம் காரணமாக இயற்கை, பாம்பு ஆகியவற்றை வழிபட்டிருக்கின்றனர்.
5. பண்டையகாலத்தில் போரில் இறந்த வீரனின் நினைவாக நடப்பட்ட நடுகல்லை மகளிர் வழிபட்டுள்ளனர்.
6. இறந்தோருக்காகச் செய்யப்படும் இல்லச் சடங்காகப் பாடைக்கட்டுதலும், சுடுகாட்டுச் சடங்காக ஈமகாரியமும், நினைவுச் சடங்காக பிண்டம் வைத்தலும் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. இவற்றில் மகளிரும் பங்குப் பெற்றிருக்கின்றனர்.
7. சங்ககால மக்களின் நம்பிக்கைகள், அக்கால சூழலில் வாழ்ந்த மக்களின் வாழ்வியல் நிலைகளை உணர்த்துபவையாகக் காணப்படுகின்றன.

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

8. மகளிர் ஒரு செயல் தொடங்குவதற்கு முன்பு முது பெண்டீரால் நெல், நீர், பூக்கள் கொண்டு விரிச்சி கேட்டல், நிமித்தம் பார்த்தலில் தீய நிமித்தம் கண்டு அச்சமுறுதல் ஆகிய நிலைகள் பதிவாகியுள்ளன.
9. நெய், வெண் சிறுகடுகு, கொண்டு கண்ணேறு கழித்தல், மறுபிறப்பு, பேய்கள் குறித்த நம்பிக்கைகள் மகளிரிடம் இருந்திருக்கின்றன.
10. சங்ககால மகளிர் மேற்கொண்டிருந்த சடங்குகள், நம்பிக்கைகளில் சில தற்காலங்களிலும் நம்பப்படுபவையாக இருக்கிறது.

**சங்கப் புற இலக்கியங்களில் கலைகள்**

1. கலை என்பது மனிதனின் உள்ளத்தைத் தன்வயப்படுத்தி ஆற்றலை வெளிப்படுத்துவதாகும். கலை என்னும் சொல் 'கல்' என்னும் ஏவற் பகுதியிலிருந்துத் தோன்றியதாகும்.
2. கலை என்பதற்கு ஆண்மான் வகை, ஆண் குரங்கு, ஆடை, பகுதி,சேணம், ஒளி நுட்பமான காலஅளவு, எழுத்து, நூல், மொழி, உடல்,பெண்களின் இடையணி, கற்பூர வகை என்று பலவகையாக பொருள்கள் அமைந்துள்ளன.
3. விளையாட்டு என்பது சிறுவர் முதல் பெரியவர்கள்வரை மேற்கொள்ளும் ஒரு கலையாகும். இக்கலை பொழுது போக்காகவும், மன மகிழ்ச்சியை ஊட்டக் கூடியதாவும், உடல் நலம் பேணும் செயலாகவும் இருக்கிறது.
4. மகளிர் கழங்காடுதல், பாவை, பந்து, ஓரை, மணல் விளையாட்டுக்கள், எண்ணி விளையாடுதல், வள்ளைப் பாட்டு, மலர் கொய்தல், நீர், விளையாட்டு போன்ற செயல்களில் மனம் மகிழ்ந்து ஈடுபட்டிருக்கின்றனர்.
5. கூத்துக் கலைகளில் குரவை மற்றும் துணங்கைக் கூத்துக்களையும் இதனோடு தொடர்புடைய நாடகக்கலையிலும் மகளிர் ஈடுபட்டு இருக்கிறார்கள் என்பது பெறப்படுகிறது.
6. இசைப்பவரையும் கேட்பவர்களையும் உணர்வினால் இணைப்பது இசையாகும்.
7. உழிஞை, தழிஞை, விறற்களம் ஆகிய பாடல் வகைகளை மகளிர் பாடியிருக்கிறார்கள்.
8. குறிஞ்சி, மருதம், பாலை, காஞ்சி, செவ்வழி ஆகிய பண்வகைகளில் இசைத்துப் பாடுவதில் வல்லவர்களாக மகளிர் திகழ்ந்திருக்கிறார்கள்.
9. சங்ககால மகளிர் தழையாடை, பருத்தியாடை, பட்டாடை போன்ற ஆடைவகைகளை உடுத்தியிருக்கிறார்கள்.
10. தலையணிகள், காதணிகள், கையணிகள், இடையணிகள், காலணிகள், கழுத்தணிகள் போன்றவற்றைத் தங்களது வசதிக் கேற்பவும், சூழலுக் கேற்பவும் சங்ககால மகளிர் அணிந்திருக்கிறார்கள்.

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

11. சங்ககால மகளிர் ஒப்பனைக் கலைகளில் கூந்தல், முகம், உடல், நகம் ஆகியவற்றை ஒப்பனைச் செய்து ஆரோக்கியம் பேணிச் சிறந்திருந்துள்ளனர். Tamil Keyboard (தமிழ்விசைப்பலகை)

**பரத்தைமகளிர்**

கணவன் பரத்தையர் பால் பிரிந்து சென்றாலும் அவன் மேல்கோபம் கொள்ளாமல் ஊடலைமட்டும் காட்டும் மகளிரையும் சங்ககாலத்தில் காணமுடிகிறது. விலை மதிக்க முடியாவைரம் போல நல்ல மகளிர் இருந்தாலும் பரத்தை, காமகிளத்தி போன்றோரும் எதிர்காலத்தை அறியும் கட்டுவிரிச்சி வெறியாட்டு நடத்தும் குறமகள், தேவராட்டி, தோழி, செவிலி, நற்றாய் என சங்ககாலத்திலே இருந்துவந்தனர்.

**கைம்பெண்ணும் கலக்கமும்**

பெண்ணாகப் பிறந்து பல தருணங்களில் தன்னை அர்பணித்துக் கொண்ட அவளுடைய கணவன் இறந்து பட்டால் அப்பெண்ணின் நிலை என்ன? இழிவு, துன்பம், போராட்டம் தான் வாழ்க்கையாக அமைகிறது. கைம்மை பற்றிபா. இறையரசன் கூறும் போது கணவன் இறந்த பிறகு வாழும் மகளிர் கைம் பெண்கள், ஆளில் பெண்டிர், கழிகல பெண்டிர், படிவமகளிர், உயவர் பெண்டிர், பருத்திப் பெண்டிர் எனப்பட்டனர். மேலும் அவர்கள் அணிகலன்கள் அணியாமலும் உப்பில்லாத உணவை மட்டுமே உண்டனர் என்கிறார். இப்படி பெண்கள் சிறுவயதில் மகிழ்ச்சியும், இன்பமும் பெற்றவர்கள். திருமணம் ஆகிகைம் பெண் ஆனால் அவர்கள் உடன்கட்டை (புறம். 247) ஏறுவது என்பது வருத்தம் அளிக்கக்கூடியதாக உள்ளது..

**முடிவுரை**

இவ்வாய்வுக் கட்டுரையானது சங்ககாலத்தில் வாழ்ந்த மகளிரின் சிறப்புகளை கூறுவதோடு மட்டு மல்லாமல், சங்க இலக்கியப் பாடல்கள் வாயிலாக அவர்கள் எந்தச் சூழலில் எவ்வாறு வாழ்ந்தனர் என்பது குறித்தும் எடுத்துரைக்கிறது. பெண்கள் குடும்ப அமைப்பில் ஒவ்வொன்றிலும் எவ்வாறு செயல்பட்டனர் என்பது குறித்தும் பேசப்பட்டுள்ளது. பெண்கள் குறித்து கூறப்பட்டுள்ள பல்வேறு பெயர்கள் குறித்தும் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**குறிப்புகள்**

[1] இறையரசன், பா. *தமிழர் நாகரிக வரலாறு.* பூம்புகார் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு 1993.

[2] சண்முகம்பிள்ளை, மு. *தொல்காப்பியம் பொருளதிகாரம்.* முல்லை நிலையம், 2004.

[3] சொர்ண செயா பி. "*சங்க இலக்கியங்களில் பெண்களின் வாழ்வியல் நெறிகள்.*" தொகுதி 2, சிறப்பிதழ் 3, தொகுதி 1, பிப்ரவரி, 2020.

[4] தட்சணாமூர்த்தி, அ. (உ.ஆ). முனைவர். *ஐங்குறுநூறு* (மூலமும்உரையும்). நீயூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை - 600098.

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

[5] துரைசாமிப்பிள்ளை, ஔவைசு. *புறநானூறு*. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 108.

[6] நச்சினார்க்கினியர் உரை. *தொல்காப்பியம் பொருளதிகாரம்*. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் – 1986.

[7] நச்சினார்க்கினியர். *கலித்தொகை*. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை 600014.

[8] நாகராசன், வி. (உ.ஆ). *குறுந்தொகை* (மூலமும்உரையும்). நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை - 600098.

[9] பரிமேலழகர் உரை. *திருக்குறள்*. பூம்புகார் பதிப்பகம்.

[10] பிள்ளை, கே. *தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்*. உலக தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2000.

[11] பொற்செல்வி, பொ. "சங்க இலக்கியங்களில் வாழ்வியல் நெறிகள்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*. தொகுதி 2, சிறப்பிதழ் 3, பிப்ரவரி, 2020.

[12] பொன்னுசாமி, மு. *சங்க இலக்கியத்தில் காதல் மெய்ப்பாடுகள்*. இந்து பதிப்பகம், 1990.

[13] *சங்கப்புற இலக்கியங்களில் சமயம், சடங்கு, கலைகள்*. இணையதளதரவுகள்.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.